**சுருக்கம்**

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – 2008–2009ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – சேலம் மாவட்டம், சேலம் வட்டம் அக்ரஹாரபூலாவரி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தனேரி வரையிலான பாசனக் கால்வாய்களை நபார்டு வங்கி உதவியுடன் நவீனப்படுத்துதல் – ரூ.78.00 இலட்சம் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (டபிள்யூ1) த்துறை**

அரசாணை (நிலை) எண். 128 நாள்: 27.07.2009

படிக்க:

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கடித எண். எப்1/1300/Announcement/ 2008–2009, நாள் 29.04.2008.

------

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் மானியக் கோரிக்கையில் அப்போதைய மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி மற்றும் சட்டம்) அவர்கள் சேலம் மாவட்டம், சேலம் வட்டம், அக்ரஹாரபூலாவரி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தனேரி வரையிலான பாசனக் கால்வாய்களை ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் புனரமைத்து மேம்படுத்தப்படும் என தெரிவித்தார்.

2. மேற்கண்ட திட்ட மதிப்பீட்டினை ரூ.78.00 இலட்சங்களில் (2008–2009 ஆம் விலை விவரப்படி) தயாரித்து நீர்வள ஆதாரத்துறை தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பியுள்ளார். மேற்காணும் இத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் நபார்டு வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதற்காக நபார்டு வங்கியிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையிலும், இத்திட்டத்தின் அவசியம் மற்றும் அவசரத்தை முன்னிட்டும், நபார்டு வங்கியிடமிருந்து நிதியுதவியை எதிர்நோக்கி, சேலம் மாவட்டம், சேலம் வட்டம், அக்ரஹாரபூலாவரி கிராமத்தில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தனேரி

வரையிலான பாசனக் கால்வாய்களை புனரமைத்து மேம்படுத்த ரூ.78.00 இலட்சம் (ரூபாய் எழுபத்து எட்டு இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளிக்கிறது. மேலும், நபார்டு வங்கியிடமிருந்து இச்செலவினம் பின்னர் மீளப் பெறப்படும்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

"4702–00. சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101. மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JK ஊரகத் தொழில் வளர்ச்சி நிதியின் கீழ் புதிய திட்டங்களுக்கு நபார்டு வங்கியிடமிருந்து கடன் உதவி பெற்ற மாநில சிறு பாசனத் திட்டம் – 16. பெரும் பணிகள் (து.தொ.கு. 4702–00–101–JK 1607)."

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I) த்துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய உரிய படிவத்தில், இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–I) த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2009–2010ல் (Supplementary Estimates 2009-2010) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–II) த்துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 42953/பொ.ப.II/09, நாள் 27.07.2009 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 457 (நானூற்று ஐம்பத்து ஏழு) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி.

தலைமைப் பொறியாளர் (கட்டுமான ஆதாரம், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை 18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை18.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்.
மாவட்ட கருவூல அலுவலர், சேலம்.
பொது மேலாளர், நபார்டு வங்கி, (சென்னை மண்டலம்), 105, 106, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 34.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை 9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை 9.
நிதித்துறை, சென்னை 9.
நிதி (பொ.ப.II) / வ.செ.(பொ.I) / வ.செ.(பொ.II) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறையில் உள்ள பாசனப் பிரிவுகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்